1978 பிப்ரவரி 28]

கல்வராயன் மலைப்பகுதிக்கு மின் இணைப்பு

* 313 வினா : திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலைக்கு மின் இணைப்புக் கொடுக்கும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் இம்மக்கள் வாழும் பகுதிகளுக்கு நடப்பு நிதி ஆண்டில் மின் இணைப்புத்தருவது சம்பந்தமாக தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ரூ. 10 இலட்சம் மானியமாக வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலைப் பகுதியில் நடப்பு ஆண்டில் இரண்டு கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

திரு துரை முத்துசாமி : எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு எவ்வளவு தொகை என்பதை அறிவிக்க இயலுமா ? அதோடு கல்வராயன் மலையிலே மின் இணைப்புத்தருவதற்கு மின்சார இலாகாவைச் சேர்ந்தவர்கள் யோசனை கூறினால் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த நிபுணர்களின் கருத்துக்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறினார்கள். அதுபற்றி எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி அமைக்கத் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தத் திட்டம் கல்வராயன் மலை தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலை சேலம் மாவட்டம், பச்சைமலை சேலம் மாவட்டம் ஆகிய பகுதிகளில் விரிவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் அரசம்பட்டி, மொட்டம்பட்டி ஆகிய கிராமங்களுக்கும் விஸ்தரிப்பது குறித்து பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கல்வராயன் மலையைப் பற்றிய கேள்வி அதைப் பற்றி மட்டும் நீங்கள் கேளுங்கள்.

திரு சி. பழனிமுத்து : சேலம் மாவட்டம் கல்வராயன் மலையிலும் தென்னாற்காடு மாவட்டம் கல்வராயன் மலையிலும் இந்தத் திட்டம் இணைந்துள்ளதாகக் கூறப்பட்டது. கல்வராயன்

மலைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது கருமாந்துறை, செம்படுகை, மண்ணூர் ஆகிய கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்: தமிழ்நாடு மின் வாரியம் ரு 123 லட்சத்தில் பழங்குடி மக்கள் நலவாழ்வுக்காக துணைத்திட்டத்தின் கீழ் இம்மக்கள் வாழும் பகுதிகளுக்கு மின் இணைப்பு தர ஒரு செயற்குறிப்பை அரசுக்கு அனுப்பியது. இதனைப் பரிசீலத்து பின்னர் அதன் முதல் கட்டமாக 1977 ஆம் ஆண்டுக்காக ரூ 10 லட்சம் அரசு மானியமாக வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை நகரில் புதிய சாலை அமைப்பு

*314 வினா: திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணாசாலைக்கு இணையாக மாற்றுச் சாலையொன்று அசோக்நகர், கோடம்பாக்கம் வழியாக அமைக்கும் திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: குறிப்பிடப்பட்டுள்ள சாலை அண்ணா சாலைக்கு இணையாக அமைக்கப்படும் சாலை அல்ல. அண்ணா சாலையில் 12.4 கிலோ மீட்டரிலிருந்து பிரிந்து கிண்டி தொழிற் பேட்டை, அசோக் நகர், கோடம்பாக்கம் வழியாகப் பூவிருந்தவல்லி தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து சென்னை திருவள்ளூர் தேசிய நெடுஞ்சாலையில் 11.7 கிலோ மீட்டரில் சேரும் நீளம் வரை போடப்படும் மாற்று வழிச் சாலையாகும். இச்சாலையின் பணி, உலக வங்கித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. இப் பணி, இவ்வாண்டிலேயே துவங்கப்பட்டு படிப்படியாக 1980-க் குள் முடிக்கப்படும்,

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, அண்ணாசாலையில் தற்போது நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி உள்ளது. அதற்கு மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மாற்று வழித் திட்டத்தின் அடிப்படையிலேதான் இது அமைக்கப்பட்டு வருகிறது.